அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்.15/2016
தேதி. 13.01.2016

# ஜல்லிக்கட்டுக்கு இடைக்காலத் தடை
# சமத்துவ மக்கள் கட்சி நிர்வாகி தீக்குளிக்க முயற்சி
# யாரும் தீக்குளிக்கக் கூடாது
# சம.க. தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ வேண்டுகோள் !

ஜல்லிக்கட்டுக்கு உச்ச நீதிமன்றம் விதித்துள்ள இடைக்காலத் தடை தமிழர்களுக்கு மிகுந்த வேதனையளித்துள்ளது. இளைஞர்கள் உணர்ச்சிக் கொந்தளிப்பில் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் சாலைமறியலில் ஈடுபட்டு வருகிறார்கள். நமது உணர்வுகளை ஜனநாயக ரீதியில் வெளிக்காட்ட வேண்டும். மேலும் அனைத்துத் தமிழ்மக்களுக்கும் ஜல்லிக்கட்டு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். ஒட்டுமொத்த மக்களும் ஜல்லிக்கட்டுக்குக் குரல் கொடுக்கும் சூழ்நிலையைத் தமிழகத்தில் உருவாக்க வேண்டும்.

## தீக்குளிக்க முயற்சி

நேற்று அலங்காநல்லூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் அலங்காநல்லூர் ஒன்றிய துணைச் செயலாளர் கேட்டுக்கடை மணி தீக்குளிக்கும் முயற்சியில் ஈடுபட்டது அதிர்ச்சி அளிக்கிறது. பாலமேட்டில் 16 ஆம் தேதி நடைபெற இருந்த ஜல்லிக்கட்டு விழாவில் நான் கலந்துகொள்ள இருந்தேன். கட்சி நிர்வாகிகள் தம்பி மணி மற்றும் அருள், பொன்னுச்சாமி புறநகர் மதுரை கிழக்கு மாவட்டச் செயலாளர் டாக்டர் . பிரபாகரன், மண்டலச் செயலாளர் ஜி.ஈஸ்வரன் ஆகியோர் சிறப்பான வரவேற்பு ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. எந்த ஒரு இளைஞரும் இதுபோன்ற முயற்சிகளில் ஈடுபடக்கூடாது. நாம் வாழப்பிறந்தவர்கள், இப்போது உருவாகி இருக்கும் சூழ்நிலை இடைக்காலத் தடைதான். இந்தத் தடையை நீக்கி ஜல்லிக்கட்டு தமிழகத்தில் நிரந்தரமாக நடைபெற நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். அதை விடுத்து நம்மை நாமே இழக்கும்செயல்களில் ஈடுபடுத்திக் கொள்ளக்கூடாது என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்,

ஆர்.சரத்குமார் எம்.எல்.எ,
தலைவர்.